# கிழக்குப் பல்கலைக்கழகம்

## முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - I
## (நாடகமும் அரங்கியலும்) - 2004-2005 (ஜனவரி/பெப்ரவரி 2006)

**DTAS** 2101 அரங்கப் பாரம்பரியம் (கிரேக்கம் தொடக்கம் 19ம் நூற்றாண்டு வரை)

நேரம் : 03 மணித்தியாலம்

முதலாம் பகுதியிலிருந்து எல்லா வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்கும், மூன்றாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி -1

1. நாடகத் தோற்றம் பற்றி எழுந்த எண்ணக்கருக்களைத் தருக?
2. கிரேக்க நாடகங்களின் கரு எவ்வாறு அமைந்திருக்கும்?
3. கிரேக்கத்தில் 3 நடிகர்களை அறிமுகப்படுத்திய நாடக ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடுக?
4. கிரேக்க மகிழ்நெறி நாடகங்களின் பண்பு யாது?
5. உரோம கால அரங்க வளர்ச்சியை சுருக்கமாக ஐந்து வரிகளில் குறிப்பிடுக?
6. உரோம காலத்து இன்பியல் நாடக ஆசிரியர் இருவரைக் குறிப்பிடுக?
7. டெரன்ஸ் என்ற நாடக ஆசிரியரின் நாடகங்களைத் தருக?
8. மத்திய காலத்தில் இடம்பெற்ற நாடக வகைகள் யாவை?
9. மறுமலர்ச்சிக் காலத்தில் இடம்பெற்ற அரங்கச் செயற்பாடுகள் சில கூறுக?
10. வில்லியம் ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற நாடகங்கள் 5 தருக.

(புள்ளிகள் 30)

### பகுதி-11

02) மேற்கத்தேய அரங்க வரலாற்றின் தொட்டில் என அழைக்கப்படும் காலத்தை வரையறை செய்து, அக்கால துன்பியல் நாடகங்களின் பகுதிகளைக் குறிப்பிட்டு அவ் அரங்கின் பண்புகளை விளக்குக?

03) உரோமர் கால அரங்கக் கட்டடங்களின் சிறப்புக்களைக் குறிப்பிடுக? மத்திய கால அரங்கின் வீழ்ச்சிக்கு உரோம காலம் ஒரு காரணமானது என்பதனைத் தெளிவுபடுத்துக?

(புள்ளிகள் 20)

### பகுதி-111

04) சடங்கில் இருந்து நாடகம் தோற்றம் பெற்றது என்ற கூற்றை ஆதாரமாகக் கொண்டு மேற்கத்தேய அரங்க வரலாற்றினைச் சுருக்கமாக ஆராய்க?

05) மேற்கத்தேய அரங்க வரலாற்றில் இருண்ட காலம் என வரலாற்றாசிரியர்களால் அழைக்கப்படும் காலத்தை உமது அறிவுக்கு எட்டிய வரை பரிசீலிக்குக?

06) மறுமலர்ச்சிக் காலத்தின் புகழ்பெற்ற நாடக ஆசிரியரான, ஷேக்ஸ்பியரின் நாடக வகைகளைக் குறிப்பிட்டு, அவரது நாடகப் பண்புகளை விளக்குக?

(புள்ளிகள் 50)